# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.93/மா/2025
நாள் 07.10.2025

| | |
|---|---|
| திரு. S.V. உதயகுமார்<br>நாகர்கோவில் | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>நாகர்கோவில் மாநகராட்சி | எதிர் மனுதாரர் |

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவரின் 29.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.01.2025 அன்று பெறப்பட்டு 93/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவர் 29.12.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நாகர்கோவில் மாநகராட்சி வார்டு எண் 16 வெட்டுண்ணி மடம் பகுதியில் அமைந்துள்ள ஏசு ராஜா ஆலயத்தில் திருவிழாவினை முன்னிட்டு அரசு சாலைப் பகுதியில் தற்காலிகமாக கடைகள் அமைக்கப்பட்டிருந்தது. நாகர்கோவில் மாநகராட்சியால் பொது ஏலம் விடாமல் இருப்பதோடு 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ஜவகர் அவர்கள் கடைகள் மீது சுமார் ரூ.25 இலட்சம் வசூல் செய்வதை சுட்டிக்காட்டி 22.11.2024 அன்று அரசு செயலாளருக்கு புகார் கடிதமும் மற்றும் ஆணையர் அடங்கிய இதர நபர்களுக்கு நகலையும் வழங்கி இருந்தேன். அதற்கு ஆணையாளர் அவர்கள் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் கோரிக்கையை ஏற்று இரண்டு இலட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டு கடைகளை கோயில் நிர்வாகம் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று 12.12.2024ல் பதில் கடிதம் வழங்கியிருந்தார். அக்கடிதத்தை இப்புகாருடன் இணைத்துள்ளேன்.

கோயில் நிர்வாகத்தின் கோரிக்கையின்படி இரண்டு இலட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டு மாநகராட்சி இடத்தில் கடை நடத்த மாநகராட்சி சட்டத்தில் எந்த வழிவகையும் இல்லை. எனவே கோவில் நிர்வாகத்தின் கோரிக்கையை ஏற்று கடை நடத்த அனுமதி வழங்கி நாகர்கோவில் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு மற்றும் விதிமுறை மீறிய குற்றத்திற்காக சம்பந்தப்பட்ட நாகர்கோவில் மாநகராட்சி ஊழியர்கள் மீதும் கோவிலின் அருகிலேயே இந்த வார்டின் மாமன்ற உறுப்பினரும் மண்டல தலைவருமான திரு.ஜவகர் அவர்கள் வீடு அமைந்திருந்தும் அவர் மாமன்றத்தில் இந்த பிரச்சனை குறித்து

எந்த எதிர்ப்பையும் பதிவு செய்யாததால் அன்னாரின் மீது கடமை மீறிய குற்றத்திற்காகவும் தன் வீட்டின் முன் பகுதியிலேயே கடை அமைப்பதற்கு அனுமதி வழங்கி நாகர்கோவில் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுத்திய குற்றத்திற்காகவும் நடவடிக்கை எடுப்பதோடு வருங்காலத்தில் ஏலம் விட நாகர்கோவில் மாநகராட்சிக்கு உத்திரவிடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

ஜவகர் அவர்களின் வீட்டின் முன் பகுதி சாலை மாநகராட்சி இடத்தில் கடை நடத்தப்பட்டது. அதற்கான புகைப்பட ஆதாரத்தையும் இப்புகார் கடிதத்துடன் இணைத்துள்ளேன்.

கிறிஸ்து அரசர் ஆலயத்தின் முன் பகுதி மற்றும் ஆலயத்தின் வலதுபுறம் கோலி கிராஸ் மருத்துவமனை சாலையின் இரு பக்கங்களிலும் சுமார் 300 மீட்டர் நீளத்தில் கடைகள் அமைக்கப்பட்டிருந்தது. அதற்கான புகைப்பட ஆதாரத்தையும் புகார் கடிதத்தோடு இணைத்துள்ளேன்." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 07.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது 30.06.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண். 5623/2025/அ6–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

"1. புகாரில் குறிப்பிட்டுள்ள பகுதி நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16இல் உள்ள வெட்டூர்ணிமடம் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் முன் அமைந்துள்ளது.

2. மேற்படி கிறிஸ்து அரசர் ஆலயத்தின் வருடாந்திர திருவிழா நிகழ்ச்சி பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அதுசமயம் தற்காலிக கடைகளும் அமைக்கப்படுகிறது.

3. 2019–ஆம் ஆண்டு முதல் திருவிழா காலத்தில் இந்த இடத்தினை தற்காலிகமாக கடைகள் அமைத்து பயன்படுத்துவதற்கு நாகர்கோவில் மாநகராட்சி மூலம் கட்டணம் வசூலித்து வருகிறது.

4. மேற்படி திருவிழா காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு கிறிஸ்து அரசர் திருச்சபையால் மாநகராட்சிக்கு பின்வரும் விபரப்படி தொகை செலுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2021–ஆம் ஆண்டிற்கு | ரூ.1,25,000/– |
| 2022–ஆம்ஆண்டிற்கு | ரூ.2,00,000/– |
| 2023–ஆம் ஆண்டிற்கு | ரூ.2,00,000/– |
| 2024–ஆம் ஆண்டிற்கு | ரூ.2,00,000/– |

5. மேற்படி திருவிழா காலங்களில் தற்காலிக கடைகள் 10 தினங்களுக்கு மட்டுமே அமைக்கப்படுகின்றன. மேலும் நிகழ்வுகள் முடிந்தவுடன் மேற்படி கடைகள் அனைத்தும் உடனடியாக அகற்றப்படுகின்றன.

6. மேலும், இனி வரும் காலங்களில் மேற்படி கிறிஸ்து அரசர் ஆலயம் திருவிழாவின் போது பொது ஏலம் மூலம் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு மாமன்றத்தில் பொருள் வைத்து மாமன்றத்தின் முடிவுபடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மாண்புமிகு உள்ளாட்சி முறை மன்ற நடுவம் மேற்கூறியவற்றை கருத்தில் கொண்டு இவ்வறிக்கையினை ஏற்று புகார் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 12.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 12.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"நாகர்கோவில் மாநகராட்சி, வார்டு எண் 16 வெட்டுண்ணி மடம் பகுதியில் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் முன்பகுதி மற்றும் ஆலயத்தின் வலது புறம் கோலி கிராஸ் மருத்துவமனை சாலையின் இரு பக்கங்களிலும் சுமார் 300 மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டிருந்தது. நாகர்கோவில் மாநகராட்சி பொது ஏலம் விடாமல் 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ஜவகர் அவர்கள் கடைகள் மீது சுமார் ரூ.25 இலட்சம் வசூல் செய்வதை சுட்டிக்காட்டி 22.11.2024ல் அரசுக்கும் மற்றும் மாநகராட்சி ஆணையருக்கும் புகார் கடிதம் அனுப்பியுள்ளேன். ஆணையர் அவர்கள் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் கோரிக்கையை ஏற்று ரூ.2 இலட்சம் பெற்றுக்கொண்டு கடைகளை கோயில் நிர்வாகம் நடத்த அனுமதி வழங்கப்பட்ட முறை மாநகராட்சி சட்டத்தில் எந்த வழிவகையும் இல்லை. அக்கடைகளை சர்ச் நிர்வாகத்தால் கூடுதலாக தொகை நிர்ணயம் செய்து வாடகைக்கு விடுகிறார்கள். நடத்த அனுமதி வழங்கிய நாகர்கோவில் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு மற்றும் விதிமுறை மீறிய சம்பந்தப்பட்ட நாகர்கோவில் ஊழியர்கள் மற்றும் இந்த வார்டின் மாமன்ற உறுப்பினரும், மண்டல தலைவருமான திரு.ஜவகர் வீடு அமைந்திருப்பதும், அவர் இந்த பிரச்சனையை குறித்து மாமன்றத்தில் எந்த எதிர்ப்பையும் பதிவு செய்யாமலும், தனது கடமையை செய்ய தவறியதற்காகவும், நாகர்கோவில் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுத்திய குற்றத்திற்காகவும், மேலும் சம்பந்தப்பட்ட நாகர்கோவில் மாநகராட்சி ஊழியர் மற்றும் மாமன்ற உறுப்பினர் மற்றும் மண்டல தலைவருமான திரு.ஜவகர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு நாகர்கோவில் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிந்து வேண்டுகிறேன்.

மேற்கண்ட புகார்கள் குறித்து 16 பக்கங்கள் கொண்ட ஆவணம் – வால்யூம்–I மற்றும் 56 பக்கங்கள் கொண்ட ஆவணம் – வால்யூம்–II ஆகியவற்றை இத்துடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன்.

6. நாகர்கோவில் மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் உதவியாளர் ஆகியோர் 12.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

(அ) புகாரில் குறிப்பிட்டுள்ள பகுதி நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16இல் உள்ள வெட்டூர்ணிமடம் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் முன் அமைந்துள்ளது.

(ஆ) மேற்படி கிறிஸ்து அரசர் ஆலயத்தின் வருடாந்திர திருவிழா நிகழ்ச்சி பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அதுசமயம் தற்காலிக கடைகளும் அமைக்கப்படுகிறது.

(இ) 2019–ஆம் ஆண்டு முதல் திருவிழா காலத்தில் இந்த இடத்தினை தற்காலிகமாக கடைகள் அமைத்து பயன்படுத்துவதற்கு நாகர்கோவில் மாநகராட்சி மூலம் தொகை வசூலித்து வருகிறது.

(ஈ) மேற்படி திருவிழா காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு கிறிஸ்து அரசர் திருச்சபையால் மாநகராட்சிக்கு பின்வரும் விவரப்படி தொகை செலுத்தப்பட்டுள்ளது.

2021–ஆம் ஆண்டிற்கு ரூ.1,25,000/–
2022–ஆம் ஆண்டிற்கு ரூ.2,00,000/–
2023–ஆம் ஆண்டிற்கு ரூ.2,00,000/–
2024–ஆம் ஆண்டிற்கு ரூ.2,00,000/–

மேற்கண்ட தற்காலிக கடைகள் கிறிஸ்து அரசர் திருச்சபையால் தன்னிச்சையாக ஏலம் விடப்பட்டது தவறான செயலாகும்.

மேற்படி திருவிழா காலங்களில் தற்காலிக கடைகள் 10 தினங்களுக்கு மட்டுமே அமைக்கப்பட்டு திருவிழா முடிந்தவுடன் தற்காலிக கடைகளை அனைத்தும் உடனடியாக அகற்றப்படுகின்றன.

மேலும், இனி வரும் காலங்களில் மேற்படி கிறிஸ்து அரசர் ஆலயம் திருவிழாவின் போது பொது ஏலம் மூலம் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு மாமன்றத்தில் பொருள் வைத்து மாமன்றத்தின் முடிவுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் ஆவணம், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

நாகர்கோவில் மாநகராட்சி, வார்டு எண் 16 வெட்டுண்ணி மடம் பகுதியில் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் முன்பகுதி மற்றும் ஆலயத்தின் வலதுபுறம் கோலி கிராஸ் மருத்துவமனை சாலையின் இரு பக்கங்களிலும் சுமார் 300 மீட்டர் நீளத்தில் அமைந்திருந்த இடத்தில், தற்காலிகமாக அமைக்கப்பட்ட கடைகள் மீது நாகர்கோவில் மாநகராட்சி பொது ஏலம் விடாமல் 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ஜவகர் என்பவர் சுமார் ரூ.25 இலட்சம் வசூல் செய்வதை அரசுக்கும் மற்றும் மாநகராட்சி ஆணையருக்கும் புகார் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், ஆணையர் அவர்கள் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் கோரிக்கையை ஏற்று ரூ.2 இலட்சம் பெற்றுக்கொண்டு கடைகளை கோயில் நிர்வாகம் நடத்த அனுமதி வழங்கப்பட்ட முறை மாநகராட்சி சட்டத்தில் எந்த வழிவகையும் இல்லை என்பதும், அக்கடைகளை சர்ச் நிர்வாகத்தால் கூடுதலாக தொகை நிர்ணயம் செய்து வாடகைக்கு விடுவதால், நாகர்கோவில் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுகிறது என்பதும் மற்றும் இந்த வார்டின் மாமன்ற உறுப்பினரும், மண்டல தலைவருமான திரு.ஜவகர் வீடு அமைந்திருப்பதும், அவர் இந்த பிரச்சனையை குறித்து மாமன்றத்தில் எந்த எதிர்ப்பையும் பதிவு செய்யாமலும், தனது கடமையை செய்ய தவறியதற்காகவும், நாகர்கோவில் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுத்திய குற்றத்திற்காகவும், மேலும் சம்பந்தப்பட்ட நாகர்கோவில் மாநகராட்சி ஊழியர் மற்றும் மாமன்ற உறுப்பினர் மற்றும் மண்டல தலைவருமான திரு.ஜவகர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளது மனுதாரரின் மனு, மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள பகுதி நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 இல் உள்ள வெட்டூர்ணிமடம் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் முன்அமைந்துள்ளது என்பதும், மேற்படி கிறிஸ்து அரசர் ஆலயத்தின் வருடாந்திர திருவிழா நிகழ்ச்சி பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது என்பதும், அதுசமயம் தற்காலிக கடைகளும் அமைக்கப்படுகிறது என்பதும், 2019–ஆம் ஆண்டு முதல் திருவிழா காலத்தில் இந்த இடத்தினை தற்காலிகமாக கடைகள் அமைத்து பயன்படுத்துவதற்கு நாகர்கோவில் மாநகராட்சி மூலம் தொகை வசூலித்து வருகிறது என்பதும், மேற்படி திருவிழா காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு கிறிஸ்து அரசர் திருச்சபையால் மாநகராட்சிக்கு 2021–ஆம் ஆண்டிற்கு ரூ.1,25,000/–ம், 2022–ஆம் ஆண்டிற்கு ரூ.2,00,000/–ம், 2023–ஆம் ஆண்டிற்கு ரூ.2,00,000/–ம் மற்றும் 2024–ஆம் ஆண்டிற்கு ரூ.2,00,000/–ம் தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட தற்காலிக கடைகள் கிறிஸ்து அரசர் திருச்சபையால் தன்னிச்சையாக ஏலம் விடப்பட்டது தவறான செயலாகும் என்பதும், மேற்படி திருவிழா காலங்களில் தற்காலிக கடைகள் 10 தினங்களுக்கு

மட்டுமே அமைக்கப்பட்டு திருவிழா முடிந்தவுடன் தற்காலிக கடைகள் அனைத்தும் உடனடியாக அகற்றப்படுகின்றன என்பதும், இனி வரும் காலங்களில் மேற்படி கிறிஸ்து அரசர் ஆலயம் திருவிழாவின் போது பொது ஏலம் மூலம் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு மாமன்றத்தில் பொருள் வைத்து மாமன்றத்தின் முடிவுகளின்படி நடவடிக்கை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்பதும் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையர் மற்றும் உதவியாளரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள பகுதி நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 இல் உள்ள வெட்டூர்ணிமடம் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் முன்அமைந்துள்ள இடத்தில், மேற்படி கிறிஸ்து அரசர் ஆலயத்தின் வருடாந்திர திருவிழா நிகழ்ச்சி நடைபெறும் போது அமைக்கப்படும் தற்காலிக கடைகளை கிறிஸ்து அரசர் திருச்சபை தன்னிச்சையாக ஏலம் விடாமல், நாகர்கோவில் மாநகராட்சி மாமன்றத்தில் பொருள் வைத்து, அம்மாமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தற்பொழுது தெரிவித்திருந்தாலும்,

(i) திருவிழா காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு கிறிஸ்து அரசர் திருச்சபைக்கு அரசு வழிகாட்டுதல்கள் மற்றும் விதிகளின்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும், அவ்வாறு வழங்கப்பட்ட அனுமதியின் காரணமாக மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்தும் உள்ளாட்சி தணிக்கை துறை மூலம் சிறப்பு தணிக்கை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்

நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S.V.உதயகுமார்
கதவு எண் 439A, M.S ரோடு, பார்வதிபுரம்,
நாகர்கோவில்–629 003.

(2) ஆணையர், நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

9/10/25
செயலாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032
வாய்மையே வெல்லும்